**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்**
**மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்**

**MCOP No.114/2020** 21.08.2025 **ம.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராமசாமி | தொழில் |
| த/பெ | பழனிச்சாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை மனுதாரர் கேட்டுக் கொண்டிருக்கும் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் இறந்து போனவரும் மனுதாரர்களும் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். விபத்து தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் நான் தான் 108 ஆம்புலன்ஸுக்கு போன் செய்தேன். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார்கள். லாரி எதிர் திசையில் இருந்து வந்தது. இருசக்கரவாகனத்தை ராமமூர்த்தி என்பவர் ஓட்டி வந்தார்.

2. மேற்படி ராமமூர்த்தி சாலையின் வலது புறமாக லாரியின் வலது பின்புறத்தில் உரசி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல இடது புறமாக தான் சென்றார் எதிரில் வந்த லாரியின் பின்பக்கம் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டு விட்டது. இரு இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் மேற்படி இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வருவதை பார்த்த

லாரி ஓட்டுநர் லாரியை மேற்கு பக்கம் திருப்பியும் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் இரு சக்கர வாகனத்தை ஓட்டி லாரியின் பின்பகுதியில் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்தபோது நான் சாலையின் மேற்கு பக்கத்தில் நின்றிருந்தேன். விபத்து லாரியின் கிழக்கு பக்கமாக நடந்தது என்றால் சரிதான். லாரியின் மேற்கு பக்கம் நான் நின்று இருந்ததால் லாரியின் கிழக்கு பக்கம் நடந்த விபத்தை பொறுத்து எந்த பாகம் மோதி விபத்து ஏற்பட்டது என்று என்னால் சரியாக கூற முடியாது என்று சொன்னால் சரியல்ல நான் தள்ளி நின்றதால் எனக்கு விபத்து நடந்தது நன்றாக தெரியும்.

3. விபத்து தொடர்பான குற்ற வழக்கு என்ன நிலைமையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. விபத்து வழக்கை விசாரித்த போலீசார் மேற்படி விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டியின் கவனக்குறைவு தான் காரணம் என குறிப்பிட்டு வழக்கை முடித்துள்ளார்கள் என்றாலும் மேற்படி விபரத்தை தெரிந்து கொண்டும் எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தை விசாரித்த போலீசார் என்னை ஒரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல என்னை சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் இறந்து போனவரும் மனுதாரர்களும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் விபத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்துக்கு லாரி ஓட்டுனரின் கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.08.25 19:11:00 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.